

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கி பேசினார். இதில் மாவட்ட நிர்வாகிகள், எம்.எல்.ஏ.க்கள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### சென்னை கிழக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞருக்கு ஆண்டு முழுவதும் விழாக்கள்!

## நூற்றாண்டு விழா பொதுக்கூட்டத்தை எழுச்சியுடன் நடத்துவோம்

## மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்! பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜூன் 1 - சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம், 30.05.2023, செவ்வாய் கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறக் கூட்டத்தில், மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் S.மணிமுடி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, கே. எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், பரிதி இளம்சுருதி, மாவட்ட நிர்வாகிகள்: தேவ ஜவஹர், ஜி.மகாதேவன், இசட். ஆசாத், பகுதிக் கழக செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக் கண்ணு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், வே. வாசு, கூ.பி. ஜெயின், டி. எஸ்.பி. ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ் (எ) நீலகண்டன், டாக்டர் பூர்ணிமா, நிர்மலா தேவி, கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, அணிகளின் அமைப்பாளர்கள்: சி.மகேஷ் குமார், டி.லோகேஷ், ஆர். எஸ்.சித்திக், கே.கோகுல், பா.ஜெகதீஷ், ஜெ.பாலமுருகன், வானவில் விஜய், நா.துலுக்காணம், ஜி. தாமோதரன், மோகன், பி. விஜயகுமார், எம்.பெரோஸ் கான், எம்.விநாயகம், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.சாந்தகுமாரி, நாகவள்ளி பிரபாகரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்துகொண்டனர். வட்டக் கழக செயலாளர், மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

**தீர்மானம்:1**

திருக்குவளையில் பிறந்து திருவாரூரில் வளர்ந்து தன்னுடைய 14 வயதில் ஓடிவந்த இந்தி பெண்ணே கேள் என தொடங்கி தான் தொட்ட துறைகள்.. குறிப்பாக இலக்கியம் ,கவிதை, இதழியல்,நாடகம், திரைப்படம் என அனைத்திலும் தமிழ் தமிழினம் தமிழினத்தின் உரிமைகளை காக்க வேண்டுமென்பதற்காக தன் இறுதி மூச்சு வரை போராடிய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு துவக்க விழா மாபெரும் பொதுக்கூட்டத்தை கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணத்தின் படி வெற்றிகரமாக நடத்திட உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்:2**

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அரை நூற்றாண்டு காலம் கட்டிக் காத்த நம் கழகத்தை வலிமைப்படுத்த மேலும் ஒரு கோடி உறுப்பினர்களை சேர்க்க நம் கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் முன்னெடுத்த உடன்பிறப்புகளாய் இணைவோம் என்ற திட்டத்தின் படி பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகி களிடம் வழங்கப்பட்டுள்ள படிவங்களை உடனடியாக இல்லந்தோறும் தேடிச் சென்றும், முக்கிய இடங்களில் முகாம் அமைத்தும் இளைஞர்களையும் பொது மக்களையும் உறுப்பினர்களாய் சேர்த்து ஏற்கனவே திட்டமிடப்பட்ட இலக்கை அடைய விரைந்து செயல்பட முடிவெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்:3**

இந்திய திருநாட்டின் குடியரசுத் தலைவர்களையும் பிரதமர்களையும் பல முறை உருவாக்கி தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் இந்திய அரசியலின் திசையை தீர்மானிப்பவராக திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,நமது இயக்கக் கொள்கைகளையும்.. நம் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இரண்டாண்டு சாதனைகளை மக்களிடையே கொண்டு சேர்க்கின்ற வகையில் ஆண்டு முழுவதும் பல்வேறு கூட்டங்கள் விழாக்கள் நடத்த உறுதி ஏற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

### அமைச்சர் த.மனோதங்கராஜ் தலைமையில்

# ஆவின் நிறுவன உற்பத்தி - தரக்கட்டுப்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## தரம் குறையாமல் நுகர்வோர்களுக்கு சேர்க்க அறிவுறுத்தல்!

சென்னை, ஜூன் 1- பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் நேற்று முன்தினம் (30.05.2023) தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் பால் பதம் மற்றும் தர உறுதி பிரிவுகளுக்கான ஆய்வுக் கூட்டம் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நடைபெற்றது.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் கீழ்க் கண்ட உத்தரவுகளை பிறப்பித்தார்.

பால் பொருட்கள் உற்பத்தியின் போது ஏற்படும் இழப்பீடுகளுக்கு அனுமதிக் கப்பட்ட இழப்பு நிர்ணயம் செய்தல் (Norms).

அனைத்து நிலைகளிலும் தர கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

பால் மற்றும் பால் உப பொருட்களில் சுவை மற்றும் தரத்தை மதிப்பிடுவதற்கு ஆராய்ச்சி ஆய்வகம் அமைத்தல்.

பால் உற்பத்தி அதிகரிக்கும் போதும், குறையும் போதும் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளை சமாளிக்க திட்ட வரைவு தயாரித்தல்.

உற்பத்தி செய்யப்படும் பால் மற்றும் பால் உப பொருட்கள்நுகர்வோருக்கு அனுப்பி வைக்கும் போதும், போக்குவரத்தின் போதும் தரம் குறையாமல் உரிய நேரத்தில் தரமான பொருட்கள்நுகர்வோருக்கு சென்று சேருவதை உறுதி செய்தல்.

ஆவின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அவர்கள் துறை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி உடனடியாக வழங்குதல்.

பேக்கிங் மூலப்பொருட்கள், ஆய்வகத்தில் பயன்படுத்தப்படும் வேதிப்பொருட்கள் மற்றும் பால் உப பொருட்களுக்கு உண்டான தர நிர்ணய விவரங்களை உறுதி செய்தல்.

தொழிற்சாலைகளில் FSSAI அங்கீகரிக்கப்பட்ட தர நிர்ணயப்படி பணிகள் நடைபெறுவதை உறுதி செய்தல்.

பால் மற்றும் பால் உப பொருட்களை கையாளுவதற்கு மாவட்ட ஒன்றிய மற்றும் இணைய அளவில் குளிர்விக்கப்பட்ட மற்றும் குளிர்விப்பு வசதி தேவைப்படாத சேமிப்பு கிடங்கு வசதியை மேம்படுத்த வேண்டும் (Refrigerated and Non Refrigerated Storage Facilities).

நொதியூட்டப்பட்ட பால் உப பொருட்களான (தயிர், மோர், லஸ்ஸி), ஐஸ் கிரீம், மற்றும் இனிப்பு வகைகள் ஆகியவற்றிற்கு தனி வாகனங்கள் மூலம் விற்பனைக்கு விநியோகிக்கப் பட வேண்டும்.

இந்த ஆய்வு கூட்டத்தில், பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் பால் பதம் மற்றும் தர உறுதி பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோடுவெளி தங்கம் முரளி தலைமையில்

# எல்லாபுரம் மத்திய ஒன்றிய இளைஞரணி சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## தாயகம் கவி எம்.எல்.ஏ. - ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை,ஜூன் 1- திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் மத்திய ஒன்றிய இளைஞர் அணி தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் 24.5.2023 அன்று ஆயிலச்சேரி, ஒன்றிய கழக செயலாளர், (எல்லாபுரம் மத்திய ஒன்றியம்) கோடுவெளி தங்கம் முரளி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், எல்லாபுரம் மத்திய ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், எல்லாபுரம் மத்திய ஒன்றிய உள்ளாட்சி நிர்வாகிகள், ஆயிலச்சேரி ஊராட்சி நிர்வாகிகள், கன்னிகாபுரம் ஊராட்சி நிர்வாகிகள், கோடுவெளி ஊராட்சி, தாமரைப்பாக்கம் ஊராட்சி, வெங்கல் ஊராட்சி, செம்பேடு ஊராட்சி, குருவாயல் ஊராட்சி, சேத்துப்பாக்கம் ஊராட்சி, மாகரல் ஊராட்சி, கொமக்கம்பேடு ஊராட்சி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஆயிலச்சேரி துணை தலைவர் வி.சுரேஷ் நன்றி கூறினார்.

### சேலம் மாவட்டத்தில் நீரில் மூழ்கி

# உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 1-

சேலம் மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், முனியப்பன் கோவில் காட்டுவளவு, விருத்தாசம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பரணிதரன், த/பெ. சுபாஷ் (வயது 15) மற்றும் கரட்டுப்பட்டி நங்கவள்ளி கிராமத்தைச் சேர்ந்த கிரித்திஷ், த/பெ.தங்கராசு (வயது 8) ஆகிய இரண்டு சிறுவர்களும் (30-5-2023) அன்று விருத்தாசம்பட்டி கிராமம், முனியப்பன் கோவில் காட்டூர் ஏரியில் குளிக்கச் சென்ற போது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### கழக துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் இருபெரும் விழாவாக கொண்டாடப்படுகிறது!

# தி.மு.க. மகளிர் - தொண்டர் அணி சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழா!

## மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் - தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி அறிக்கை!

சென்னை, ஜூன் 1- தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் இரு பெரும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இவ்விழா குறித்து கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க மகளிர் அணியின் சார்பில் ,முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் “ நூற்றாண்டு பிறந்த நாள் விழா” கழக துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் 3.6.2023 மற்றும் 5.6.2023 நாட்களில் இருபெரும் விழாவாகக்கொண்டாடப்படுகிறது.

3.6.2023 : காலை 11 மணிக்கு இராயப்பேட்டை உட்லேண்ட்ஸ் திரையரங்கத்தில் தமிழகத்தில் சமுதாயப்புரட்சியை ஏற்படுத்திய தலைவர் கலைஞரின் கைவண்ணத்தில் உருவாகிய “ பராசக்தி “ படம் திரையிடப்படுகிறது. அனுமதி இலவசம்.

5.6.2023 : மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் வாழ்த்தரங்கம்,இசையரங்கம்,நாட்டிய அரங்கம் நடைபெற இருக்கிறது.

அதில் தலைவர் கலைஞர் திரைப்படங்களுக்கு எழுதிய பாடல்களைத்தொகுத்து திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி தாயன்பனின் பல்லவி குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது.

அடுத்து கலைஞரின் திரைப்பாடல்களுக்கு நாட்டிய வடிவம் கொடுத்து கலைமாமணி பார்வதி ரவி கண்டசாலாவின் இருபது மாணவிகள் நடனமாடுகிறார்கள்.

மேற்கண்ட இரு நிகழ்வுகளிலும் தலைமைக்கழக நிர்வாகிகள் , அமைச்சர்கள், நாடாளுமன்ற , சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

அனைவரும் வாரீர், வாரீர் என அன்போடு அழைக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### கர்நாடக மாநில தி.மு.க. சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி அறிவிப்பு!

பெங்களூர், ஜூன் 1- கர்நாடக மாநில தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா நிகழ்ச்சி குறித்து அம்மாநில அமைப்பாளர் ந.இராமசாமி அறிவிப்பு வருமாறு:-

03-06-2023 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இராமசந்திரபுரம், மாநில தி.மு.க. கலைஞரக வளாகம், தளபதி மு.க.ஸ்டாலின் மணி விழா அரங்கத்தில் நடைபெறும். விழாவில் கழக கொடி ஏற்றிவைத்து, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாநில தி.மு.க. நிர்வாகிகள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள், தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகிகள், தி.மு.க. மகளிர் அணி நிர்வாகிகள், கழக தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்குவர்.

நிகழ்ச்சியில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : தமிழ்நாடு அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டங்கள் தேதி பிறகு அறிவிக்கப்படும்.

இவ்வாறு நா.இராமசாமி அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. சண்முகம்

### ஜூன் 1 (1987)



தந்தை பெரியாரின் நம்பிக்கைக்குரிய தொண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணாவின் கவனத்தைக் கவர்ந்து அவரது இதயத்திலும் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக் கொண்டவர்.

கழகம் துவங்கிய காலத்திலிருந்து தலைமைக் கழகத்தில் பொறுப்பாளராக பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

‘நம்நாடு’ திங்கள் இதழாக வெளிவந்தபோதும், ‘கழகக் குரல்’ வார இதழிலும், ‘தோழன்’ என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

1976ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, மிசா காலத்தில் சோதனை ஏற்பட்டபோதுதான் ‘தோழன்’ என்ற பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம் என்பது புரிந்தது என தலைவர் கலைஞர் கூறியுள்ளார். மேலும், தனது இரங்கல் உரையில் “கழகத்தின் வரலாற்றுக் குறிப்புப் புத்தகம் – எழுதப்படாத புத்தகம் சண்முகம்” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நாமக்கல்லில் மீண்டும் மஞ்சப் பை தானியங்கி இயந்திரம்!

நாமக்கல், ஜூன் 1- ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைக்கு மாற்றாக சுற்றுச்சூழல் பாதுகாப்பினை கருதி முதல்வரின் “மீண்டும் மஞ்சப்பை” விழிப்புணர்வு தமிழகம் எங்கும் வெகு விமர்சையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அங்கமாக தானியங்கி மஞ்சப்பை வழங்கும் இயந்திரம் “Manjappai Vending Machine” மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் துவக்க விழா நடைபெற்றது.

இதில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாமக்கல் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், குமாரபாளையம் ஆகியோர்கள் ஒருங்கிணைப்பில் பொது மக்கள் முன்னிலை வகித்தனர். நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் கீரனூர் ஒ.எஸ்.பி. திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளரும் ஒன்றியப் பெருந்தலைவருமான கே. ஆர்.என்.போஸ், மாவட்ட துணைச் செயலாளர் பெ.ராஜேஷ்வரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு.சண்முகம், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.சேட்டு, ஓ எஸ் வெங்கடாசலம், வீ.முத்துகிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, சி.சண்முகம், மா.தமிழய்யா, பேரூர் கழக செயலாளர்கள் ப.அண்ணாதுரை, உ.முருகேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் டாக்டர்.செ.குறிஞ்சிவாணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கலைஞர் கருணாநிதி உள்ளிட்ட ஒன்றிய பேரூர் கிளை கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.